மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 132, திரு. பே. தர்மலிங்கம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

132—

நியாயவிலைக் கடைகள்.

*1315 திரு. பே. தர்மலிங்கம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

பொதுமக்கள் உணவுப்பண்டங்கள் நியாவிலைக் கடையில் வாங்க 4 கி.மீ. தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளதால் இதனை மாற்றி உள்ளூரிலேயே நியாவிலைக் கடைகள் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஒரு நியாய விலைக்கடை இயங்கி வருகிறது. அப்படி ஏற்கெனவே நியாயவிலை கடை இயங்கி வருகிற கிராமங்களில் ஆறு, காடு, மலை போன்ற இயற்கைத் தடைகள் இருக்குமானால், 3 கிலோ மீட்டருக்கு உள்ளே இருந்தாலும், வேறு புதிய கடைகள் பகுதி நேரத்திலே திறப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் பொது மக்கள் 4 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று நியாயவிலைக் கடைகளில் உணவுப் பண்டங்களை வாங்கி வருகிற கஷ்டம் எல்லாத் தொகுதி களிலும் இருந்து வருகிறது. குறிப்பாக, பாளையங் கோட்டைத் தொகுதியில் கண்டித்தான்குளம், அடைமிதித்தான் குளம், ஆலங்குளம் ஆகிய கிராமங்களிலுள்ள தாய்மார்கள் சுமார் 4 கிலோ மீட்டர் தூரம் வரை நடந்து சென்று, அங்குள்ள கிராமத்திலுள்ள கடைக்குச் சென்று பொருள் வாங்க வேண்டியிருக்கிறது. எனவே, மேற்கூறிய 3 கிராமங்களையும் இணைத்து, அடைமிதித்தான் குளத்தில் ஒரு நியாய விலைக் கடையை அமைக்க தாயுள்ளம் கொண்ட நம்முடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல், ஏழை மக்கள், குறிப்பாக இல்லத்தரசிகள் நடந்து போக

வேண்டிய அவசியம் இல்லையென்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதையும் மீறி, சில விசேஷக் காரணங்கள் இருக்குமானால், அதையும் பரிசீலனை செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது. அப்படிப்பட்ட நேரத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரிடமே, தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் எழுதிக் கொடுக்க வேண்டும். அது பரிவோடு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்க முன்பு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் இருந்தது. தற்போது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்த அதிகாரம் இல்லை. ஆகவே, மாண்புமிகு தாயுள்ளம் கொண்ட நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் அரசு, அப்படிப்பட்ட நியாயவிலைக் கடைகளை அமைத்துத் தருவதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்த அதிகாரம் இருக்கிறது. ஆனால் மாநிலப் பதிவாளருடைய இசைவைப் பெற வேண்டுமென்ற ஒரு கண்டிஷனையும் அதிலே சேர்த்து வைத்திருக்கிறோம். ஆனாலும், எந்தவித இடையூறும் ஏற்படாமல் அதிக நாட்கள் தள்ளிப்போடாமல் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 500 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை என்ற முறையிலே அமைத்து, கூட்டுறவுக் கடைகள் இல்லாமல், படித்து வேலையில்லாத பட்டதாரிகளுக்கு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, கடைகள் திறக்கப்படுவது ; வேலை கொடுப்பதற்காக என்ற நோக்கம் இல்லாமல், அத்தியாவசியப் பண்டங்கள் குடும்பங்களுக்குப் போய் சேர வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் கடைகளைத் திறந்து கொண்டிருக்கிறோம். 800 அட்டைகளுக்குக் கீழே இணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கடைக்கும் ஆண்டுதோறும், அதை நடத்துவதிலே நஷ்டம் ஏற்படுகிறது. அந்த நஷ்டத்தையும் அரசாங்கம் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. மாநிலப் பதிவாளர் ஆண்டு ஒன்றுக்கு 3 கோடி ரூபாய்க்கு மேலே நஷ்டம் ஏற்படுகிறது என்று கேட்டு

கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொகையையும் முழுமையாக நாம் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம். எனவேதான். பகுதி நேரக் கடைகளைத் திறப்பதற்கு அரசு தயாராக இருக்கிற இந்த நேரத்திலே, வாடகை இல்லாமல் கட்டிடத்தை அந்தந்தப் பகுதியிலே இருப்பவர்கள் கொடுப்பார்களேயானால், அங்கு பகுதி நேரக் கடைகளை அமைக்க அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் — விடைகள் நேரம் அவையின் முன் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 133, திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

133—

குடுமியான்மலை அரசுப் பண்ணையில் விவசாயக் கல்லூரி.

*336—திரு. சி. குழந்தைவேலு :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, குடுமியான்மலை அரசுப் பண்ணையில் விவசாயக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் உள்ள பண்ணையை வேளாண்மைக் கல்லூரியாக மாற்றும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

திரு. சி. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடுமியான்மலை விவசாயப் பண்ணை சுமார் 200 ஏக்கர் நஞ்சை, புஞ்சை நிலங்களை உடையதாகும். மேலும், அங்கு ஒரு கல்லூரி நடைபெறுவதற்கு வேண்டிய அனைத்துக் கட்டிட வசதிகளும் உள்ளன. மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் குடுமியான் மலையில் விவசாயக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் கோப்பில் இருந்தது. இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களது ஆட்சியிலாவது அங்கு ஒரு விவசாயக் கல்லூரி அமைக்கும் திட்டம் ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.